பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 14 புதன்கிழமை (29 07 1992) UTHAYAN — A Lively National Tamil Daily சுடர் 244

# யாழ் - திருமலை இடையே பயணிகள் கப்பல் சேவை

## விரைவில் ஆரம்பிக்கப்படும் என யாழ். அரச அதிபருக்குத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கூட்டுப்படைத் தலைமையகத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இத்தகவலை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்குத் தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சனையை தீர்க்க வசதியாக இந்தக் கப்பல் சேவை நடத்தப்படும் என அரச அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பல் சேவையை தனியார் மூலமாக நடத்துவதா அல்லது புனர்வாழ்வு அமைச்சு மூலம் நடத்துவதா என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் —

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் இச் சேவை நடத்தப்பட வேண்டும் என்று தாம் அதிகாரிகளிடம் தெரிவித்திருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

''பாரூஸ்'' என்ற கப்பலே அனேகமாக இச்சேவையில்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## நாசகாரவேலை அல்லவாம்

கொழும்பு, ஜூலை 29

திருகோணமலை, கோணேசராலய வீதியில் அமைந்திருந்த சிங்கள மீனவர்களின் குடிசைகள் தீக்கிரையானதற்கு நாசகார வேலை காரணமல்ல.

— இவ்வாறு கூட்டுப்படைகள் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஒ-எ)

## தந்திரிமலை பிக்குவை படையினரே கொன்றனர்

### விசாரணையில் புதிய தகவல்கள்

கொழும்பு, ஜூலை 29

தந்திரிமலை விகாரையின் பிரதம பிக்குவான விமல ஞான தேரோவை படையினரே கிரனேட் வீசிக் கொன்றனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கொலைக்கு பாவிக்கப்பட்ட கிரனேட் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்ட ஒன்று என புலனாய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இரகசியப் பொலீஸ் உயரதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்ததாக 'லங்காதீப' சிங்களப் பத்திரிகையின் ஞாயிறு இதழில் செய்தி வெளியாகியிருக்கிறது.

விகாராதிபதி தங்கியிருந்த

[2 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் மேலும் 36 மாணவருக்கு பல்கலைக்கழக அனுமதி

### அமைச்சர் ஹமீத் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

பல்கலைக்கழக அனுமதிக்கான 1990 ஆகஸ்ட் பரீட்சையையும் 1991 ஏப்ரல் விசேட பரீட்சையையும் வெவ்வேறானதாகக் கணிக்கும் போது, சில மாவட்டங்களில் இருந்து பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த வீழ்ச்சியைச் சரிக்கட்ட அத்தகைய மாவட்டங்களில் இருந்து மேலதிக எண்ணிக்கையான மாணவர்களை பல்கலைக் கழகங்களில் அனுமதிக்க வேண்டி உள்ளது.

இதன் அடிப்படையில் பொறியியல், வர்த்தகம் மற்றும் மருத்துவ கற்கை நெறிகளுக்கான பல்கலைக் கழகங்களில் மேலதிகமாக 108 மாணவர்களை அனுமதிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இந்த 108 மாணவர்களில் 36 பேர் யாழ். மாவட்டத்தைச்

[2ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவுக் குழுவின் அறிக்கை செப்டம்பர் முற்பகுதியில்?

யாழ்ப்பாணம், ஜூலை 29

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது அறிக்கையை அனேகமாக, எதிர்வரும் செப்டம்பர் பத்தாம் திகதியளவில் கையளிக்கும் என்று கொழும்புப் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு மீண்டும் இன்று கூடும் போது அமைச்சர் தொண்டமான் ஆகப்பிந்திச் சமர்ப்பித்த (நான்கு அம்ச) திட்டம் ஆராயப்படும் என்று நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

இதேவேளை தமிழ்ப் பகுதிகளுக்குப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உத்தேச புதிய நிர்வாக அமைப்பின் கீழ் சிவில் பாதுகாப்பு, சட்ட அமுல் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துப் பொலீஸ் மா அதிபரிடம் யோசனை கேட்கப்படும் என்றும் தெரிகிறது. (அ-3)

## கிழக்கு சுற்றிவளைப்பில் தமிழர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை மற்றும் வவுணதீவு முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து கடந்த 25 ஆம் திகதி தாண்டியடி, கொத்தவலை, காஞ்சிரன்குடா, வாழைச்சேனை ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்தனர்.

இச் சுற்றிவளைப்பின் போது ஹெலிக்கொப்டர் ஒன்று அப் பகுதியில் வட்டமிட்டு 50 கலிபர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டது. இராணுவத்தினரும் துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டனர். படையினரின் துப்பாக்கிச் சூட்டில் முனைக்காட்டைச் சேர்ந்த வல்லிபுரம் பதுமன் என்பவர் உயிரிழந்தார்.

முனைக்கட்டையைச் சேர்ந்த பொன்னம்பலம் ஆனந்தன் [28 வயது] தில்லையம்பலம் ரவி [27 வயது], பாலிப்போடி (25 வயது) ஆகிய மூவரும் காயமடைந்தனர். [உ-த]

## விசேட பரீட்சை முடிவு எடுத்து வரப்படவில்லை!

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டது போல நேற்று வெளியாகவில்லை.

யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பிலிருந்து நேற்றுத் திரும்பியிருந்தபோதிலும், அவர் பரீட்சை முடிவுகளை எடுத்துவரவில்லை.

பரீட்சை முடிவுகளை தாம் வரும்போது எடுத்து வருவதற்கு முயற்சி எடுத்ததாகவும்—

ஆனால் பரீட்சைப் பகுதிக் கணனியில் திடீரென ஏற்பட்ட கோளாறு [illegible] வும், செயல்முறைப் பரீட்சை

[2 ஆம் பக்கம் பார்க்க]

# இயக்கச்சியில் கண்ணி! ராணுவ வாகனம் சிதறியது!!

## 4 படையினர் பலி; 4 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 29

இயக்கச்சிப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவ வாகனம் ஒன்று கண்ணியில் சிக்கிச் சிதறியது.

இச் சம்பவத்தில் 4 இராணுவத்தினர் உயிரிழந்தனர்; 4 பேர் காயமடைந்தனர்.

கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது என்றும் —

வாகனங்களைத் தகர்க்கப் பாவிக்கும் அமுக்க கண்ணியிலேயே வாகனம் சிக்கியது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

# அம்பாறை, மட்டக்களப்பில் ராணுவ நடவடிக்கை தீவிரம்

மட்டக்களப்பு, ஜூலை 29

மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பழுகாமம், அக்கரைப்பற்றுப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 4 நாட்களில் பத்துக்கு மேற்பட்ட இராணுவ நிலைகள் இப் பகுதிகளில் அமைக்கப்பட்டன; அவற்றில் பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அப்பகுதிகளில் பலத்த தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பழுகாமம் தும்பன்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போது 18 தமிழர்கள் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதற்கிடையில் —

அம்பாறையிலுள்ள குருமண் வெளியில் அதிரடிப் படையினர் பெரிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர் என்றும் — பெருமளவு அதிரடிப் படையினரும், பொலீஸாரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறியவந்தது. [உ-த]

## சர்வசன வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 29

வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் நிரந்தரமாக இணைப்பதா இல்லையா என்பது பற்றி கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை ஜனாதிபதி பிரேமதாஸா மீண்டும் ஒத்திவைத்திருக்கிறார்.

இந்த சர்வசன வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி நடத்தப்படும் என்று புதிய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

# போரதீவு முகாம் மீது 3 மணிநேரத் தாக்குதல்

மட்டக்களப்பு, ஜூலை 29

மட்டக்களப்பு — வெல்லாவெளியில் உள்ள போரதீவு இராணுவ முகாம் மீது கடந்த சனிக்கிழமை அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வாவியில் இருந்தும் தரைப் பகுதியில் இருந்தும் — இருமுனைத் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர் என்றும் —

சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் மோதல்கள் நீடித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 40 பேர் கொண்ட விடுதலைப் புலிகள் அணியே இத்தாக்குதலை நடத்தியதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் காய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தோணி கவிழ்ந்து சிறுவன் மரணம்

திருநெல்வேலி, ஜூலை 29

நேற்று அதிகாலை அரியாலை உதயபுரம் கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்களில் தோணி கவிழ்ந்ததில் பத்து வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்; மற்றைய இருவர் உயிர் தப்பிக் கரை சேர்ந்தனர்.

உயிரிழந்த — மணியந்தோட்டத்தைச் சேர்ந்த இரத்தினம் கமல் என்ற சிறுவனின் [illegible] 4 [illegible] நிலையில் மீட்கப்பட்டது. [illegible]

## பலாலி முகாமில் தடுப்புக் காவலில் உள்ளோர் விரைவில் விடுதலையாவர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பலாலி உட்பட ஏனைய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தி, குற்றமற்றவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் கூட்டுப் படைகள் தலைமையக தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

**நீர் இன்றேல் சீர் இல்லை**
**குளம் இன்றேல் வளம் இல்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈழ அகதிகள் விவகாரம்:

# ஐ. நா. அமைப்புடன் இந்தியா இவ்வாரம் ஒப்பந்தம்

கொழும்பு, ஜூலை 29

தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பும் அகதிகள் சுயவிருப்பின் பேரில் தான் திரும்பிச் செல்கின்றார்களா என்பதை ஐ. நா. அகதிகள் ஆணைக்குழு திட்டவட்டமான அறிவிப்பு ஏதுமின்றி பரிசோதனை செய்ய இடமளிக்கும் உடன்படிக்கை ஒன்றில் இந்தியா கைச்சாத்திடவுள்ளது.

இவ்வாரம் ஜெனிவாவில் வைத்து இந்த உடன்படிக்கையில் ஐ. நா. அகதிகள் ஆணைக்குழுவும் இந்திய அரசும் கைச்சாத்திடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

''யுனிசெப்'' உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான 4 நாட்கள் சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று ஆரம்பமாகின்றன.

இன்றைய வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதியும், சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு. த. பூ. முருகையாவும் கலந்துகொள்ளவுள்ளனர். [அ]

## வீரமரணம்

மட்டக்களப்பு தாளங்குடாப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் கணபதிப்பிள்ளை ஜெயசீலன் — (கிரான்குளம்) வீரமரணம் அடைந்தார். (உ-த)

### போரதீவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த இரண்டாம் லெப்டினன்ட் சண்முகப்பிரியன் அல்லது அச்சுதன் (மாணிக்கம் நித்தியானந்தன் — அம்பாறை) என்ற போராளி மறுநாள் வீரமரணமடைந்ததாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### விசேட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவானதாலும் அவற்றை எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆகையால் பரீட்சை முடிவுகள் அனேகமாக இரண்டு வாரங்களின் பின்னரே வெளிவரும் என்றும் அவர் கூறினார்.

கல்விப் பணிப்பாளர் கொழும்பில் இருந்து வரும்போது பரீட்சை முடிவுகளையும் எடுத்து வருவார் என்று நேற்று முன்தினம் உதயனுக்குக் கிடைத்த தாமதமான தகவல் தவறானது என்பது இப்போது தெரியவந்துள்ளது. அதனால் வாசகர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்காகக் கவலையடைகிறோம். [அ-8-162]

### மேலும் 36...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களாக இருப்பர்.

— நீதி. உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பல்கலைக் கழக அனுமதி தொடர்பாக எழுப்பப்பட்டிருந்த கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்து ஹமீத் பேசினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக் கழக அனுமதி மாவட்டக் கோட்டாவையும் (வசதி குறைந்த மாவட்டங்களின் கோட்டா உட்பட) திறமைக் கோட்டாவையும் அடிப்படையாகக் கொண்டது. இந்த வருட மாவட்டக் கோட்டா கடந்த வருட மாவட்டக் கோட்டா போன்றதே. திறமை அடிப்படையிலான கோட்டா இரு பரீட்சைகளுக்கும் இடையே (1990 ஆகஸ்ட் 1991 ஏப்ரல்) பிரிக்கப்படுகிறது.

இந்த நடைமுறையின் விளைவாகவே சில மாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது — என்றார்.

பொறியியல், வர்த்தகம், மற்றும் மருத்துவ கற்கை நெறிகளுக்கென பல்கலைக் கழகங்களில் கூடுதல் மாணவர்கள் அனுமதிக்கப்படுவது போன்று ஏனைய 9 கற்கை நெறிகளிலும் அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும் என்றும், அது தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் ஹமீத் மேலும் கூறினார்.

(ஹமீத்தின் பேச்சின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது.)

### தந்திரிமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அறைக்குள் ஜன்னலினூடாக கிரனேட் வீசப்பட்டது என்பது சோதனைகளின் போது தெரிய வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தந்திரிமலைப் பகுதியில் இருந்த கட்டுப்பொத்த இராணுவ முகாம் கடந்த 11 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டமை குறித்து விகாராதிபதி வெளிப்படையாக கருத்துத் தெரிவித்திருந்தார் என்றும்—

அங்கிருந்த படையினரின் ஒழுக்கமற்ற நடவடிக்கைகளும், அதனைக் கவனிக்க அதிகாரிகள் தவறியமையுமே முகாம் தகர்ப்புக்கு வழிகோலின என்று அவர் குறிப்பிட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

தாக்குதல் நடந்த சமயம் முன்னணிப் படையினர் பலர் மதுபோதையில் இருந்தனர் என்ற விடயம் குறித்து, மேற்படி முகாம் தகர்ப்புப் பற்றிய இராணுவ விசாரணைகளின் போது தாம் நேரில் சாட்சியமளிக்கப் போவதாக அவர் கூறி வந்தாராம்.

மேற்படி விகாராதிபதி கொலையுண்டமை குறித்து விசாரணை நடத்த தந்திரிமலைக்கு சென்றுள்ள இரகசியப் பொலீஸார் இராணுவத்தினர் பலரைத் துருவித் துருவி விசாரித்து வருவதாக 'லங்காதீப' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கிரனேட்' வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற விகாரையின் [illegible] [illegible] தது. [உ-எ-10]

## ஒலிம்பிக் போட்டி முடிவு

பார்சிலோனா, ஜூலை 29

நேற்று வரை நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் நாடுகள் பெற்ற பதக்கங்களின் விவரம் வருமாறு.

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண். |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 06 | 02 | — |
| சீனா | 05 | 06 | 01 |
| அமெரிக்கா | 03 | 02 | 05 |
| ஹங்கேரி | 02 | 01 | 01 |
| தென் கொரியா | 02 | — | — |
| ஜேர்மனி | 01 | 01 | 03 |
| ஜப்பான் | 01 | 01 | 01 |
| பல்கேரியா | 01 | 01 | 01 |
| அவுஸ்திரேலியா | 01 | — | 01 |
| ஸ்பெயின் | 01 | — | — |
| பிரான்ஸ் | — | 02 | 03 |
| சுவீடன் | — | 02 | 01 |
| இத்தாலி | — | 01 | 02 |
| போலந்து | — | 01 | — |
| ருமேனியா | — | — | 02 |
| பெரு | — | 01 | — |
| சுயேச்சை (யூகோஸ்.) | — | — | 01 |
| நெதர்லாந்து | — | — | 01 |
| பின்லாந்து | — | — | 01 |
| மங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |

## ராணுவ உள்வீட்டு யுத்தம் நிறுத்துவதற்கு கோரிக்கை

''இராணுவத் தளபதிக்கும் பாதுகாப்பு அமைச்சின் உயர் பீடத்துக்கும் இடையே பின் அறைக்குள் நடந்து வரும் கெரில்லா யுத்தம் அம்பலத்துக்கு வந்து விட்டது.

''ஆனால் வடக்கு - கிழக்குப் பகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து சிறிதளவு தகவல் தான் வெளியிடப்படுகிறது அல்லது தெரியவருகிறது: அங்கு அப்பாவிமக்கள் உயிரிழப்பது தடையின்றி தொடருகின்றது.

—இவ்வாறு ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தனது 26 ஆம் திகதி இதழின் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. அத்தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:-

விடுதலைப் புலிகளின் வீராவேசத் தாக்குதல்களுக்கு என்

(5 ஆம் பக். ம் பார்க்க)

### யாழ்-திருமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

வாரத்தில் எத்தனை தடவைகள் இச்சேவையை நடத்துவது, போக்குவரத்து கட்டணம் ஆகியவை போன்ற விடயங்கள் ஆராயப்படுவதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (உ-3)


யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

## அறிவித்தல்

1992 ஆண்டு நடைபெறும் சர்வதேச கூட்டுறவுத் தின விழாவில் சகல கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு அமைப்புகளும் பங்கு கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளமையினால் பங்கு பெற விரும்புவோர் கோட்ட மட்ட சர்வதேச கூட்டுறவுத்தின விழா குழுவுடன் தொடர்பு கொண்டு விழாவில் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

சு. சிவசுப்பிரமணியம்
செயலாளர்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை,
யாழ்ப்பாணம்,
27 - 07 - 92



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு 03 - 08 - 1992 ஆம் திகதி அதிகாலை 12-01 மணியிலிருந்து 28 - 08 - 1992 ஆம் திகதி நள்ளிரவு 12-00 மணிவரைக்கும் கீழ் வரும் பாதைகள், தெருக்கள் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

01. அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டை தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;
02. பிராமணக் கட்டுக் குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;
03. செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித் தெருவின் அப்பாகம்;
04. பஸ் வண்டிகள், மினி பஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாகக் கச்சேரி நல்லூர் வீதிச் சந்தி வழியாக முத்திரைச் சந்தை சந்தியூடாகச் செல்லல்;
05. 2ஆம் கட்டைக் குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்
27 - 07 - 1992

[சி-2790]



## கண்ணீர் அஞ்சலி

### லயன் த. சொக்கலிங்கம்

(தலைவர், கோப்பாய் லயன்ஸ் கழகம்)

இறைவனடி சேர்ந்த லயன் த. சொக்கலிங்கம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

நல்லூர் அரிமாக்கழக
உறுப்பினர்கள்.

[21945]



யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி
அருள்மிகு மஹாமாரியம்பாள் ஆலய

## இரதோற்சவ விஞ்ஞாபனம்

ஆங்கீரச வருஷம் ஆடித்திங்கள் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை [31-07-92] காலை 8. 30 மணி அம்பாள் சித்திரத்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவார்.

### நிகழ்ச்சிகள்

காலை 5. 00 — அஷ்டோத்தரசத சங்காபிஷேகம்
காலை 7. 00 — வசந்த மண்டப பூசை
காலை 8. 00 — இரத ஆரோகணம்
காலை 10. 00 — இரத அவரோகணம்

ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர, தவில் வித்வான்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள். அனைவரும் பங்குபற்றி அம்பாளின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

(21955) — பரிபாலன சபை —



வண் கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்பாள்
தேவஸ்தானம் மகோற்சவத்தை முன்னிட்டு

## சிறப்புச் சொற்பொழிவு

கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள்



30-07-92 - ''வான்கருணை''

31-07-92 - ''நன்றே செய்வாய்''

01-08-92 - ''அன்பே சிவம்''

02-08-92 - ''வழக்காடு மன்றம்''

### ''குற்றக் கூண்டில் தசரத சக்கரவர்த்தி''

நீதிபதி இ. ஜெயராஜ் அவர்கள்

| வாதிகள் | பிரதிவாதிகள் |
|---|---|
| த. சிவகுமாரன் | என். திருநந்தகுமார் |
| க. குமாரதாசன் | இரா. செல்வவடிவேல் |
| எஸ். சோதிலிங்கம் | ஆறு. திருமுருகன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— பரிபாலன சபை —

(21956)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய போர் விமான அணி வாங்க ஸ்ரீலங்கா அரசு முடிவு

சியாமார்செட்டி போர் விமானங்களுக்குப் பதிலாக, தரைத்தாக்குதலுக்குப் பயன் படுத்தப்படும் புதிய போர் விமானங்களின் அணி (Squdron) ஒன்றை வாங்கும் விமானப்படையின் திட்டத்துக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கத் தயாரிப்பான 'சி-130 ஹெர்க்குலீஸ்' போர் விமானங்களை வாங்கவேண்டும் என்ற விமானப்படையினரின் திட்டத்துக்கு அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.

'சி-130 ஹெர்க்குலீஸ்' ரக போர் விமானங்களை வாங்குவதற்குத் தேவையான நிதி அரசாங்கத்திடம் இல்லாததே இதற்குக் காரணம் என்று 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

சியாமார்செட்டி விமானங்களுக்குப் பதிலாக விமானப் படையினர் வாங்கத்திட்டமிட்டுள்ள புதிய போர் விமானங்கள், சியாமார்செட்டி விமானங்கள் எடுத்துச் செல்லும் இராணுவத் தளபாடங்களைப் போன்று இரண்டு மடங்கு தளபாடங்களை எடுத்துச் செல்லக் கூடியவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக வாங்கப்படவுள்ள போர் விமானங்கள் இரு மேலை நாட்டு விமானப்படைகளினால் ஜெட் விமான ஓட்டிகளுக்கு பயிற்சி வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தரைப்படையினருக்கு விமானப்படை வழங்கும் பாதுகாப்பைப் பலப்படுத்தவே புதிய போர்விமானங்கள் வாங்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது குண்டுவீச்சுகளை நடத்திவரும், சியாமார் செட்டி' விமானங்கள் 1980 நடுப்பகுதியில் இருந்து விமானப்படையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## வெட்டுப்புள்ளி முறை மூலம்

# வடபகுதி மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது

## ஜனாதிபதிக்கு ந. ச. ச. க. கடிதம்

பல்கலைக்கழக அனுமதியில் வடபகுதி மாணவர்களுக்கு தனியான வெட்டுப் புள்ளி நிர்ணயிக்கப்பட்டிருப்பது அநீதியானது. இந்த விவகாரத்தில் ஜனாதிபதி உடனடியாகத் தலையிட வேண்டும்.

மேற்கண்டவாறு வலியுறுத்தும் கடிதம் ஒன்றை நவசம சமாஜக்கட்சி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

1991 ஏப்ரலில் வடபகுதியில் நடைபெற்ற பரீட்சை தனியான ஒரு பரீட்சையாகக் கணிக்கப்படாமல் 1990 ஆகஸ்டில் நடைபெற்ற பரீட்சையாகவே கணிக்கப் பட வேண்டும் என்றும் — தனியான வெட்டுப் புள்ளி யோசனை கைவிடப்பட வேண்டும் என்றும் அக்கடிதத்தில் கோரிக்கை விடப் பட்டுள்ளது.

வடபகுதி மாணவர்கள் ஒரு யுத்த சூழ்நிலையில் வழமைக்கு மாறான நிலையில் தமது கல்வியைத் தொடர வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறான நிலையில் இந்த வெட்டுப்புள்ளி விவகாரம் இனப்பிரச்சினையை மேலும் சீர்கேடடையச் செய்து தற்போது நடக்கும் யுத்தத்தை மேலும் உச்ச நிலைக்கு கொண்டு செல்லும் என்றும் கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ)

# சுதந்திரக் கட்சி தலைவியாக சந்திரிகா வருவாராம்!

## சிறிமாவோ நம்பிக்கை

ராஜயோகக் கணிப்புகளில் நம்பிக்கை வைத்து தமது மகள் சந்திரிகா சுதந்திரக் கட்சித் தலைவியாக வருவார் என்று திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா கண்டு பிடித்து உள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்று இப்படித் தகவல் வெளியிட்டிருக்கிறது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அத்தனகலை சுதந்திரக்கட்சியின் பல மண்டலயச் செயலாளராக கடந்த சனிக்கிழமை தான் சந்திரிகாவை, சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமித்தார்.

திருமதி பண்டாரநாயக்கா கட்சியில் தனக்கு இருந்த அதிகாரத்தையும் பிடியையும் படிப்படியாகத் தளர்த்தி வருகின்றார் என்று சுதந்திரக் கட்சியின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகள் சந்திரிகாவை மிகவும் கொள்கைப் பிடிப்புமிக்க, உறுதியான தலைவி என்று சிறிமாவோ நம்புகின்றார்.

இப்படி அச்செய்தி கூறுகிறது. [த-எ]

## நாடாளுமன்றத்தில் வைத்து

# சிவப்புரோஜா மலர்கள் சிறிமாவுக்கு அன்பளிப்பு

கொழும்பு, ஜூலை 29

அரசியல் வாழ்வில் 32 ஆண்டுகளை நிறைவு செய்ததை கௌரவிக்குமுகமாக திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு 66 சிவப்பு ரோஜா மலர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் வைத்து பரிசளிக்கப்பட்டன.

சுதந்திரக் கட்சியில் உள்ள 66 எம். பிக்களின் சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவும், திரு. டி. எம். ஜயரத்னாவும் ரோஜா மலர்களைப் பரிசளித்தனர்.

அவ்வைபவத்தில் 66 எம். பிக்களில் பலர் கலந்து கொள்ளவில்லை.

அனுரா பண்டார நாயக்கா தலைமையிலான பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக பல எம். பிக்கள் கொழும்பில் இருந்து வெளி இடங்களுக்குச் சென்றிருந்தனர்.

வெளியிடங்களில் இருந்து சில எம். பிக்கள் தொலைபேசி மூலம் திருமதி பண்டார நாயக்காவை வாழ்த்தினார்கள்.

ஆனால், சிவப்பு ரோஜா மலர்களை வாங்கும் போது, "66 எம். பிக்களில் எத்தனை பேர் இதய சுத்தியான வாழ்த்துக்களைத் தெரிவித்திருப்பார்களோ?" என்று திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்திருந்தார் என்று "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

நறுமணம் வீசும் ரோஜா மலர்கள் மத்தியில் அரசியல் 'முட்கள்' இருப்பதை அந்தப் பழம்பெரும் அரசியல்வாதி கண்டார் என்றும் 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது. (இ-எ)

## சிறில் ரணதுங்காவுக்கு தூதுவர் பதவி

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்க வெளிநாடு ஒன்றில் தூதுவராக நியமிக்கப்பட இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த நியமனம் ஆகஸ்ட் இறுதிக்குள் வழங்கப்பட இருப்பதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## வகுப்புப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

மட்டுவில் மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒருவார காலத்தின் பின் கைவிடப்பட்டு நிலைமை வழமைக்குத்திரும்பியுள்ளது.

உயர்வகுப்பில் கற்பித்த ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து உயர் வகுப்பு மாணவர்கள் முதலில் மறியற் போராட்டம் செய்தனர். பின்னர் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. புரட்சியின் முயற்சியால் வகுப்புப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. எனினும் ஆசிரியர்களில் சிலர் வகுப்புகளுக்குச் செல்லாதிருக்க முனைந்தனர். திரு. புரட்சி தலையிட்டு அதனையும் நிறுத்தினார்.

கடந்த வாரம் நிலைமை வழமைக்குத் திரும்பி உயர் வகுப்பு மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெற்றன.

# பெருமாளின் இல்லத்தில் ஊடுருவிய பெண் கைது

## கொலை முயற்சி எனச் சந்தேகம்

போபால், ஜூலை 29

இலங்கையின் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளைக் கொலை செய்ய முயன்றதாக இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் பெண் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள போபால் நகரில் பலத்த பாதுகாப்புடன் தனது குடும்பத்துடன் வரதராஜப் பெருமாள் தங்கி இருப்பது தெரிந்ததே.

அவர் தங்கி இருக்கும் கோட்டையின் வாசல் வழியாக ஊடுருவ முயன்ற போதே பிரஸ்தாப பெண் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப் பெண் பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய பிரதேச மாநில அரசு, தமிழ்நாடு மாநில அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

வரதராஜப் பெருமாளைக் கொலை செய்ய ஏற்கனவே இரு தடவைகள் முயற்சி மேற் கொள்ளப்பட்டதால் அவரைப் பாதுகாப்பான வேறோர் இடத்துக்கு இடம் மாற்ற வேண்டும் அல்லது அவர் தங்கி இருக்கும் கோட்டையின் பாதுகாப்புப் பொறுப்பை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய பிரதேச மாநில அரசு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. [இ]

# உள்ளூராட்சி எழுதுநர்களும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் எழுதுநர் வகுப்பு IIஇன் "அ" பிரிவுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான போட்டிப் பரீட்சை இவ் வருடம் நவம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவிருக்கும் இந்தப் பரீட்சைக்கு உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் எழுதுநர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் செயலாளர் திரு. சந்திரசேகரம் உதயனுக்கு தெரிவித்தார்.

பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி செப்டம்பர் மாதம் பத்தாம் திகதியாகும். பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குரிய நிபந்தனைகள் இம் மாதம் பத்தாம் திகதி வெளியான வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானியின் பிரதியை உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ். மாநகரசபைக் கிளைத் தலைவருடன் தொடர்பு கொண்டு பெறலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## இனப்பிரச்சினை தீர்வு:

# எதிரணியினர் நிலை குறித்து பௌத்த தேரர் கவலை!

இன்று நாட்டில் நிலவும் மிக முக்கியமான இனப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை முன்வைக்காமல் மௌனம் சாதிக்கும் சில எதிரணிக் கட்சிகளின் செயல்கள் மனவருத்தத்தை தருகின்றன.

வெள்ளவத்தை சுவிசுத்தாராம பீடத்தின் அதிபதி வண. நாகதிவன்ச நாயக்க தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்;

இனப் பிரச்சினை தீர்வுக்கு எதிரணிக் கட்சிகள் தனது ஒத்துழைப்பை வழங்குவது அவசியம் என்றும் அவர் சொன்னார். [த-10]

# யுத்தம் முடிவடைந்தால் நாட்டில் வறுமை ஒழியும்

## பௌத்த மத கூட்டத்தில் பிரேமா

கொழும்பு, ஜூலை 29

2 ஆயிரத்து 500 கோடி ரூபா செலவில் நடத்தப்படும் வடக்கு — கிழக்கு யுத்தத்துக்கு முடிவு காணப்பட்டால், இந்த நாட்டில் வறுமை முற்றாக ஒழிக்கப்பட்டு விடும்.

ஹரலியத்த என்னுமிடத்தில் நடைபெற்ற பௌத்த மதக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தென் பகுதியில் தீவிரவாதத்தை ஒழிப்பதில் வெற்றி கண்ட தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிப்பதில் எதிர்க்கட்சிகள் பாதயாத்திரைகளையும், மற்றும் இயக்கங்களையும் நடத்தி வருகின்றன.

எதிர்க்கட்சிகளின் இந்த நடவடிக்கை அரசாங்கத்தை ஒன்றும் செய்யாது. பதவி ஆசை பிடித்தே எதிர்க்கட்சிகள் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன;

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா மேலும் தெரிவித்தார். [த-எ]

# இந்திய முகாம்களில் ஜே.வி.பியினர்; தீவிரவாத நடவடிக்கைக்கு புத்துயிர்

## ஸ்ரீலங்கா பாதுகாப்பு ஆய்வாளர்கள் கவலை

ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா இந்தியாவில் தங்கி இருப்பதும் அவருக்கு அங்குள்ள பத்திரிகைகள் ஒரு சில ஆதரவு வழங்கி வருவதும் இலங்கைப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது;

தமிழகத்தில் உள்ள அகதி முகாம்களில் குறைந்தது 400 ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு இடமளிக்கப்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது;

1989இல் ஜே. வி. பியினர் அடக்கப்பட்டபோது, இந்தியாவுக்குத் தப்பிச் [illegible]களே இந்த 400 [illegible]களும் என்றும் சொல்லப்படுகிறது:

### கூட்டணிப் பிரமுகரின் அமைப்பு

இந்த ஜே. வி. பி. தீவிரவாதிகளை தமிழகத்தில் உள்ள இரண்டு அகதி அமைப்புகள் பராமரித்து வருகின்றன என்றும்—

அந்த அமைப்புகளில் ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தீவிர உறுப்பினர் ஒருவரின் தலைமையில் செயற்படுகின்றது என்றும்—

கொழும்புக்குக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் 'சண்டே ரைம்ஸ்' செய்தி கூறுகிறது.

இந்த நடவடிக்கைகள் 1984 முதல் 1986 வரை இந்திய [illegible] இந்திய புலனாய்வு நிறுவனங்கள் பயிற்சியும் ஆயுதங்களும் நிதி உதவிகளும் அளித்து உதவியமை போன்று—

இலங்கையில் ஜே. வி. பி. இயக்கம் புத்துயிர் பெற புதுடில்லியில் உள்ள கடும்போக்காளர்கள் இந்தியாவில் தங்கியுள்ள ஜே. வி. பியினருக்கு இரகசிய உதவி வழங்கக் கூடும் என்ற ஊகத்தை, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு பகுப்பாய்வாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

அதே சமயம் நாட்டின் தென்பகுதியில் சில இடங்களில் ஜே. வி. பியின் நடவடிக்கைகள் புத்துயிர் பெற்று வருகின்றன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே. வி. பியின் நடப்பு உத்தி பாதுகாப்பு படையினருடன் நேரடியாக மோதுவதாக அமையவில்லை என்றாலும் ஆயுத படைகள், பொலீஸ் சேவை, அத்தியாவசிய சேவைகள், மாணவர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் அமைப்புகளில் இரகசியமாக ஊடுருவல் செய்வதே ஜே. வி. பியின் தற்போதைய உத்தி என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ ரீதியில் அதிக நாட்டம் காட்டாது, அரசியல் ரீதியில் தீவிரம் காட்டுவதாகவே ஜே. வி. பியின் தற்போதைய செயற்பாடுகள் அமைந்துள்ளன என்றும் —

இந்த போக்கையே ஜே. வி. பி. 1984 முதல் 1986 வரை கடைப்பிடித்து வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; இல. 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்டறவல்) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (21925)

தாவடி, மானிப்பாய் றோட்டில் பெரிய வீடு நாலரைப் பரப்புக் காணியில், வாங்க விரும்புபவர் நேரில் வரவும். இல. 1, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [21942]

முதல்தர லெஜலிலான வகை - ஈடு Blank உறுதிகள் மாணவர்களுக்கான அறிவுக் களஞ்சியம்; மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றன. மொத்தமாக பெறுவோருக்கு விசேட கழிவு உண்டு. துர்க்கா ஸ்ரேஷனொஸ்டஸ் நிலையம், சுன்னாகம். (21946)

### வாங்கலாம் - விற்கலாம்

நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். உதிரிப் பாகங்களுக்கான மணிக்கூடுகளும், றேடியோக்களும் வாங்கப்படும் இவை உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். 'டில்கா வாச் வேக்ஸ்' 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் [5207]

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை மெத்தைக் கடைச் சந்தியில், பிரதான வீதியில், கிழக்குப் பக்கமாகவுள்ள 273 ஆம் இலக்கக் கடையும், விநாயக முதலியார் வீதியில் வீடு கட்டுவதற்கு உகந்த 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. குலவீரசிங்கம், விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை [5206]

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-2931]

### தவறிவிட்டது

நாராயணபிள்ளைசொர்ணகலா 665271919 V இலக்க அடையாள அட்டை 22-07-92 அன்று 750 பருத்தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு தகவல் தரவும்: விநாயகர் ஸ்தாபனம், யாழ். பருத்தித்துறை வீதி, புத்தூர். [21948]

### மணமகன் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த A/L படித்த 12 இல் செவ்வாயும், லக்கினத்தில் சந்திரன், சுக்கிரன், கேதுவுமுடைய, நட்சத்திரம்: பரணி, 32 வயது பெண்ணிற்கு மணமகன் தேவை. தொடர்பு: வி. ம. நவரத்தினம், [மதவடி] மானிப்பாய் றோட், உடுவில். [4927]

### தேவை

ஆங்கிலத்திலும் தமிழிலும் [இரு மொழிகளிலும்] தட்டெழுத்தாளர் தேவை. கணக்கியலில் அறிவுள்ளவரும் அழகான கையெழுத்துடையவரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும். நேரில் தராதரப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். க. ஸ்ரீபாஸ்கரன், தலைவர், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம். [4925]

கொப்பறாவிலிருந்து தேங்காய் எண்ணெய் வடிப்பதற்கு பயன்படுத்தும் எந்திரம் [Copra Expeller] சிறியது அல்லது மின் வலுவில் இயங்கும் செக்குத் தேவைப்படுகிறது. இல. 426, மே/பா, உதயன். [சி-2791]

### இந்து நாகரிகம்

இந்து நாகரிகம் – வாராந்த இதழாக வெளிவருகிறது. இதழ்-5 விற்பனையாகிறது. விலை ரூபா 6/- மட்டும். ஆசிரியர்: க. சி. குலரத்தினம் வெளியீடு; பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-2939)

---

## SHAMROCK

யாழ். சுண்டிக்குளி.

**94-**

Pure|App.

திரு. P. கமலசிங்கம்

ஆரம்பம்:

01-08 1992

சனி 12-00

PHY — 4 00

CHE. — 5-00

[21944]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L**
**93, 94**

புவியியல்

திரு. க. குணராசா

புதிய பிரிவு
ஆரம்பம்:

**02- 8-92**

93 — 2 3
94 — 11 12

[சி-2967]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L**
**93,94**

கணக்கியல்
யோகராஜா

வர்த்தகம்
தேவா, பசில்

புதிய பிரிவு
ஆரம்பம்:

**02-08-1992**

[சி 2968]

---

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்
## (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 93**

பொருளியல்: S. வரதராஜன் B. A. (Hons.)

★ சனி, ஞாயிறு வகுப்புகள் ★

10 — 11 உற்பத்திச் சாத்திய வளையி
11 — 12 சந்தைச் சமநிலை
1 — 2 தேசிய வருமானம்

ஆரம்பம்: 01-08-1992

[சி-2946] (சனி)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**மாணிக்கம் நவரத்தினசிங்கம்**

அன்னையின் அணைப்பில்: 18 — 05 — 1940
ஆண்டவன் ஆதரவில்: 25 — 07 — 1987

திதி: 29 — 07 — 1992

ஐந்தாண்டு நிறைவாகியும், உங்களை நினைந்து கவலைக் கண்ணீர் தினமும் வடித்தே வருகிறோம் அப்பா! எங்கள் ஆவி பிரியும் வரை எங்களைச் செல்லமாக வளர்த்த உங்கள் நினைவும், கண்ணீரும் நீங்காது அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள்.

'நவஜோதி [illegible]',
சங்கானை. [21926]

---

உ
அம்பாள் துணை

தாவடி

## ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள்
# ஆடிப்பூர விழா

ஆடி மாதம் 17ஆம் திகதி (01.08-92)
அன்று சனிக்கிழமை காலை 9-00 மணியளவில்

**அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம்**

நடைபெற்று
பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

★ விசேட மேளக்கச்சேரி

வி.கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்
பி. வீராச்சாமி குழுவினர்
தனித்தவில் கே. நித்தியானந்தம்

மாலை 5 மணியளவில் இரவுத் திருவிழா ஆரம்பமாகும்.

6 மணியளவில்
கம்பன் கழக அமைப்பாளர்

திரு. இ. ஜெயராஜ் அவர்களால்

**'மீனாக்ஷி கல்யாணம்'**

என்னும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றப்படும்

அதன் பின் விசேட மேள வாத்தியங்களுடன் அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதி உலா வந்து காட்சி தருவாள். விரும்பிய அடியார்கள் கற்பூரச்சட்டி எடுக்கலாம்.

இங்ஙனம்,
தாவடி வடக்கு, கொக்குவில். மா. சுப்பிரமணியம் சிவசுதன்.
[5210]

---

## ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள்
# தேவை

எல்லா வகையான ஆங்கில வீடியோ திரைப்படங்களையும் தமிழில் மொழிபெயர்த்தல் வேண்டும். நிறைய ஆங்கில வீடியோப் படங்கள் பார்த்த அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. 05 – 08 - 1992 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல. 425,
மே/பா, உதயன்.

[21943]

---

## வளர்ந்தோர் கல்வி
## ஆங்கிலப் பயிற்சி நெறி

யாழ். கல்வித்திணைக்கள வளர்ந்தோர் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் மேற்படி பயிற்சி நெறி யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் 02 – 08 – 1992 ஆம் திகதி பி. ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகும். 01 – 08 – 1992 ஆம் திகதி பி.ப. 3-00 மணிக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் தம்மை பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக்கு வயதெல்லை இல்லை.

– அதிபர்.

[சி-2490]

---

## உடுவில் மகளிர் கல்லூரி
[தொடர்கல்வி நிலையம்]

## பட்டப்படிப்புகள் பிரிவு

1992/1993 ஆம் கல்வி ஆண்டுக்கான யாழ்ப்பாண, பேராதனைப் பல்கலைக்கழக கலைமுதற் தேர்வு [G. A. Q ] கற்கைநெறிக்கான சகல விரிவுரை வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன. புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

-அதிபர்.

(சி-2785]

---

# நாவலர் கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

**O/L 92** மார்கழி

அனைத்துப் பாடங்களும்

விசேட மீட்டலும் வினா-விடையும்

ஆரம்பம்: 01 — 08 — 1992 காலை 8 மணி

கணிதம் — U. குணம்
விஞ்ஞானம் — G. ஈசன்

★ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அனுமதிக்கு முந்துங்கள்.

[சி-2961]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசின் தற்கொலை

"இந்த முட்டாள் தனமான யுத்தத்தை நிறுத்தி விட்டு, பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நேரம் வந்து விட்டது. ஓர் அரசியல் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியும் என்பது எங்குமே இடம்பெறவில்லை".

இவ்வாறு அரசாங்கத்துக்கும் படையினருக்கும் புத்திமதி கூறியிருப்பவர் விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குலத்திலக ஆவார்.

அரசாங்கப்படையின் தளபதியாக இருந்தவராயினும் யதார்த்தத்தை உணர்ந்தவராகவும், நிதான சிந்தனை உள்ளவராகவும் காணப்படுகிறார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறிக் கொண்டு காலக்கெடு விதிப்பது யதார்த்தமற்றது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். அத்தோடு இந்த ஆண்டு இறுதிக்குள் யுத்தத்தை முடித்து விட வேண்டும் என்று விதிக்கப்பட்ட ஆகப் பிந்திய கால அட்டவணை நடைமுறையில் செயலுக்கு வரக்கூடியது அல்ல என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த வருட இறுதிக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது என்று சவாலும் விட்டிருக்கிறார்!

தமிழர்களின் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினை. அரசியல் ரீதியாக அது தீர்க்கப்படாவிட்டால் அது கால எல்லையின்றி தொடர்ந்து கொண்டே இருக்கும். அதனை இராணுவ நடவடிக்கை மூலம் எப்படித் தீர்த்து வைக்க முடியும்?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்கும்வரை எத்தனை வருடங்களானாலும் போராடுவது என்பது தமிழர்களின் திடசங்கற்பம். அப்படியிருக்க அரசாங்கம் தானாக யுத்தத்தை நிறுத்தாத வரை தமிழர்கள் போராடவே செய்வார்கள்.

தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்குத் தெரியாத யதார்த்தம், அரசியல் என்பன ஒரு முன்னாள் படை அதிகாரிக்குப் புரிந்திருக்கிறது.

போதிய நிதிவளம் இல்லாத போதிலும் யுத்தத்தை நடத்த வேண்டும், தொடர வேண்டும் என்பதில் அரசாங்கத் தலைவர்களும், இராணுவத் தலைவர்களும் அக்கறையாக இருப்பது தென்னிலங்கைக்கே பேரிழப்பைத் தரும். ஒரு தரப்பாருக்கு அடுத்த தரப்பினர் புத்திமதி கூறி உண்மையை உணர்த்துவதை விடுத்து, இரண்டு சாராருமே ஒரு பக்கம் சொல்வதை அடுத்த பக்கம் ஆமோதிப்பது என்ற போக்கே காணப்படுகிறது.

போராட்டத்தில் படையினர் வெல்லமாட்டார்கள் என்பது தெரிந்ததால், சிப்பாய்கள் மத்தியில் மனப்பலம் குன்றுகிறது. அதனாலேயே அவர்கள் 'சொல்லாமல் கொள்ளாமல்' இராணுவத்தை விட்டுவிட்டு ஓடுகிறார்கள். அவர்களையே மீண்டும் படையில் சேர்த்து யுத்தத்தை நடத்தினால் அதில் எப்படி வெல்ல முடியும்?

இந்தச் சிறிய யதார்த்தம் புரியாதவர்களுக்கு உண்மையான நிலைப்பாடு தெரியும் என்றோ தீர்க்கதரிசனம் இருக்கும் என்றோ எதிர்பார்ப்பது எப்படி?

தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறார்கள். தமிழ் மண்ணை மீட்டு, இழந்த அரசையும், இறைமையையும் மீள நிலை நிறுத்தி, சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்ற தெளிந்த சிந்தையுடன் இப்போதைய கஷ்ட நஷ்டங்களை, இழப்புகளை அவர்கள் தாங்கிக் கொள்கிறார்கள். இனியும் தாங்குவதற்குத் தங்களைப் பக்குவப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

அது போலவே விடுதலைப் புலி வீரர்களும் மக்களின் அரசியல் இலட்சியத்துக்காகத் தமது இன்னுயிரையும் ஈந்து போராடுவதற்கு, சுதந்திர வேள்வித் தீயில் ஆகுதியாவதற்கு சிறிதும் தயங்காமல் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள்.

அரை மனதுடன் ஆயுதம் ஏந்தி வரும் சிங்களச் சிப்பாய்களால் அவர்களுடன் மோதி வெல்ல முடியும் என்பது உண்மைக்குப் புறம்பானது. ஆயுத பலம், ஆட்பலம் இருந்தால் என்ன? மனோபலம் இல்லாமல் போராடுவது வெறும் முட்டாள் தனமே. தற்கொலைக்கு ஒப்பானதே!

# வெலிக்கடையில் கொலையுண்டவர்களின் நம்பிக்கைகள் இன்று நனவாகின்றன

## நினைவுக் கூட்டத்தில் பாலகுமாரன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 29

'வெலிக்கடைச் சிறையில் தமது அங்கங்கள் பறிக்கப்படும் நிலையில் கூட, குட்டிமணி, ஜெகன் போன்றோர் துணிந்து தம் எதிர்ப்பைக் காட்டினர். சிறைக் கட்டடத்தில் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் வெறும் வசனங்களல்ல; அவை அவர்களின் நம்பிக்கைகள்; அவர்களின் அந்த நம்பிக்கைகள் இன்று நனவாவதை நாம் காண்கிறோம்.

— இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன்.

வெலிக்கடைச் சிறையில் படுகொலையுண்ட வீரர்களின் நினைவாக நேற்று முன்தினம் மாலை ஆவரங்கால் சிவன் கோவில் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெலிக்கடைப் படுகொலைகள் புகட்டிய வரலாற்றுப் பாடங்களை இன்று நாம் மீட்டிப் பார்க்கிறோம். சுயகௌரவமும், தன்மானமும் உள்ள ஒவ்வொரு தமிழனும் அந்தக் கோர நிகழ்வுகளை மீட்டுப் பார்க்க வேண்டும்.

போராட்டம் இங்கு மட்டும் நடக்கவில்லை; நாம் மட்டும் போராடவில்லை. இந்த உலகில் தன்மானமுள்ள ஒவ்வொரு இனமும் தன்னுடைய அடையாளங்களைக் காப்பாற்ற போராடியே தீர வேண்டும். வரலாற்று நியதி அதுவேயாகும்.

வெலிக்கடைப் படுகொலை சம்பவத்தில் சிக்கி உயிர் தப்பியவர்கள் இன்று கொழும்பில் இருக்கிறார்கள். இன்றைய தினத்தை நினைவு கூர முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அது அவர்களது மனச்சாட்சியை உறுத்தவே செய்யும் — என்றார்.

### தேவர் பேச்சு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக உதவிப் பொறுப்பாளர் திரு. தேவர் தனது உரையில் கூறியதாவது:-

உலகத்தையே உலுக்கிய படுகொலைகள் நிகழ்ந்த இன்றைய நாளை மறந்த பலர் இன்று நம்மிடையே இருக்கிறார்கள். தற்போது நிலவும் இந்த அமைதி கூட நிரந்தரமானது அல்ல. மிகப் பெரிய தாக்குதலுக்கான அமைதியே இப்போது குடாநாட்டில் நிலவுகிறது.

குடாநாடு நீண்ட காலமாக எமது கட்டுப்பாட்டில் இருந்து வந்ததால் இங்குள்ள மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடுமைகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். மிக விரைவில் அவர்கள் சிந்திக்க வேண்டிய நிலை வரலாம் — என்றார்.

### அரசண்ணா உரை

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா பேசுகையில் —

தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றுப் போக்கில் மிகப் பெரிய தாக்கம் நிகழ்ந்த நாள் இன்றாகும்.

இந்திய இராணுவம் வெளியேறிய பின் ஸ்ரீலங்கா அரசு மீண்டும் போர் தொடங்கிய சமயம் "சிங்கள நாகரிக சமூகத்துக்கும்; தமிழ் அநாகரிக சமூகத்துக்கும் இடையிலான போர்" என்று ஜனாதிபதி பிரேமதாஸா அதனை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் சொன்னார்.

ஆனால் தான் இறந்தால் தனது கண்ணை இன்னொருவருக்குக் கொடுங்கள் என்று கூறிய நாகரிக மேம்பாடு கொண்ட குட்டிமணி என்ற மனிதனின் கண்களைத் தோண்டிய அநாகரிக சமூகம் எது என்பதை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்து கொண்டுள்ளது — என்றார்.

வலிகாமம் கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பிரசாந்த், திரு. பொன். பூலோகசிங்கம், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி மாலினி ஆகியோரும் நினைவுரை ஆற்றினார்கள்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யாழ். மாவட்டப் பிரிவினரின் "இந்த மண்ணும் மாவீரரும்" என்னும் நாடகம் நிகழ்ச்சியின் இறுதியில் நடைபெற்றது.

(ஒ-5)

# திருச்சபையின் பணிகள் மேலும் தொடர வேண்டும்

## பயிற்சி நிலைய திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில், தென்னிந்திய திருச்சபை பெரும் உதவிகளை மக்களுக்குச் செய்து வருகிறது. அதன் பணிகள் மேலும் தொடர வேண்டும்.

தென்னிந்திய திருச்சபையின் தொழிற்பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சினார்க்கினியன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த தொழிற் பயிற்சி நிலையம் யாழ். நான்காம் குறுக்குத் தெருவில் உள்ள தென்னிந்திய திருச்சபையின் நகரப்புறப் பணிமனையில் பேராயர் மகாகனம் டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன் தொடர்ந்து பேசுகையில் —

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது போதுமான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கவில்லை. அந்த நிலையே தொடர்ந்து இன்றும் இருக்கும் என நம்புகிறேன். இத் தொழிற் பயிற்சி நிலையம் இக் குறையை நீக்க உதவும் — என்றார்.

யாழ்ப்பாண கிறிஸ்தவ யூனியன் தலைவர் டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா பேசுகையில் —

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணத்தில் மட்டும் அல்ல கிளிநொச்சியிலும் கிழக்கே மட்டக்களப்பிலும் தனது சேவையை விஸ்தரித்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு நிகழ்வு — என்று கூறினார்.

பேராயர் டி. ஜே. அம்பலவாணர் பதில் அளித்துப் பேசுகையில் —

யாழ்ப்பாணத்தில் தற்போதைய சூழ்நிலையில் ஏராளமான பெண்கள் உதவி அற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் —

அப்படியானவர்களுக்கு உதவும் நோக்குடனேயே தென் இந்திய திருச்சபை பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றது என்றும் கூறினார்.

மற்றும் யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், தென்னிந்திய திருச்சபையின் செயலர் திரு. கே. இராஜநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(இ)

# புலிகளுக்கு எதிராக யுத்தம்:

## அஷ்ரப்பின் அழைப்பை முஸ்லிம் லீக் நிராகரித்தது

கொழும்பு, ஜூலை 29

விடுதலைப்புலிகளுக்கு எதிராக புனித யுத்தம் (ஜிஹாத்) ஒன்றை நடத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் விடுத்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவருமான அல்ஹாஜ் எம். சி. எம். கலீல் நிராகரித்து விட்டார்.

தனிப்பட்ட வஞ்சம் தீர்க்கவோ அல்லது தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சண்டையிடுவதோ ஜிஹாத் (புனித போர்) தின் நோக்கம் அல்ல. சமயத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் மட்டுமே புனித யுத்தம் (ஜிஹாத்) நடத்த அனுமதிக்கப்படுகிறது.

இவ்வாறு டாக்டர் கலீல் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசும் போது விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட முஸ்லிம் தனிப்படை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றார். —

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அந்தப் படை ஜிஹாத் நடத்த வேண்டும் என்றும் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-எ)

# நாயக்க தேரர்களை விட தொண்டா சக்தி மிக்கவராம்!

கொழும்பு, ஜூலை 29

மகாநாயக்க தேரர்களை விட அமைச்சர் தொண்டமானே இந்த நாட்டில் சக்தி வாய்ந்தவராக இன்று திகழ்கின்றார்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 70 ஆவது வருடாந்த மாநாட்டில் பேசுகையில் அதன் தலைவர் பேராசிரியர் எம். பி. ஆரியபால முன்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாநாடு கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

(த-எ)

# முஸ்லிம் மீனவர் ஐவரின் சடலங்கள் கரை ஒதுங்கின

காத்தான்குடி கடலில் மீன் பிடிக்கச் சென்ற போது கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் ஐந்து முஸ்லிம் மீனவர்களது சடலங்கள் கல்லடியில் உள்ள நாவலடிப் பகுதியில் கரை ஒதுங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலங்களை மீட்க உதவும்படி அமைச்சர் மன்சூர் மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரியைக் கேட்டுள்ளார்.

[ஒ-எ]

# அனுரா - சந்திரிகா கோஷ்டியினர் கைகலப்பு!

கொழும்பு, ஜூலை 29

நித்தம்புவவில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் அனுரா கோஷ்டியினருக்கும், சந்திரிகா கோஷ்டியினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கைகலப்பில் சிலர் காயமடைந்திருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 32 வருடகால அரசியல் வாழ்வு நிறைவைப் பாராட்டி நடத்தப்பட்ட கூட்டத்திலேயே கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-எ]

# வடக்கு-கிழக்கு புனரமைப்பு பணிக்கு 30 கோடி தேவை

கொழும்பு, ஜூலை 28

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அவசர புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளில் 29 கோடியே 34 லட்சம் ரூபா தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் 14 கோடியே 34 லட்சம் ரூபா இலங்கை வங்கியில் இருந்து பெற்ற கடனைத் திருப்பி வழங்க பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்குத் தேவைப்பட்ட நிதியில் மேற்படி தொகை இலங்கை வங்கியிடம் இருந்து பெறப்பட்டது.

[த-எ]

# செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம்: அரசாங்கம் விரைவில் நீக்கும்

கொழும்பு, ஜூலை 29

அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அரசாங்கம் விரைவில் நீக்கவுள்ளது.

இந்த நாட்டில் இறக்குமதி ஏற்றுமதியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் மேலும் சலுகை அளிக்கும் [illegible] தேசிய பொரு[illegible] கட்டி எழுப்பும் விதத்திலும் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்கவிருப்பதாக வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் ஒன்று விரைவில் எடுக்கப்படவுள்ளது [illegible]

(த-எ)

### ராணுவ...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணெய் வார்ப்பது போன்று பாதுகாப்பு உயர் நிலை, தளபதிகள் மத்தியில் நிலவும் உள்ளக யுத்தம் (Inside War) காணப்படுகிறது.

உயர் நிலை வட்டாரங்கள் இதில் தலையிட்டு அந்த யுத்தத்தை நிறுத்த வேண்டும்.

பாதுகாப்பு உயர் மட்டத்தினர் மத்தியில் நிலவும் சலசலப்பு, அரசியலில் இராணுவத் தலையீடு இடம்பெறும் சாத்தியத்தை தவிர்க்கக் கூடும்.

ஆனால் —

அரசியல் ரீதியில் நாடு பிளவுண்டிருக்கும் இவ்வேளையில் நிலவரத்தை மேலும் மோசமாக்கும் வகையில் இராணுவமும் பிளவுபட்டுள்ளது; இராணுவ ஜெனரல்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-எ]

# 4 பொலீஸ்காரர் தடுப்புக் காவலில்

வவுனியா, ஜூலை 29

தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்குக் கடத்திச் செல்ல உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான நான்கு பொலீஸாரையும் 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி இவர்கள் நால்வரும் மகஸின் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

[ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக் காலத்தில் தாக்குதலை நிறுத்துக!

## அரச அதிபர் கோரிக்கை

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக் காலத்தின் போது தாக்குதல்களை தவிர்க்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் மூலமாக இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கோரிக்கை குறித்து திரு. பிரட்மன் வீரக்கோனும், கூட்டுப்படைத் தலைமையக தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து ஆலோசனை நடத்தியதாகவும் —

அதன் பின்னர் தமது கோரிக்கை கவனத்தில் எடுக்கப்பட்டிருப்பதாக தமக்கு பதிலளிக்கப்பட்டது என்றும் — அரச அதிபர் தெரிவித்தார். (உ-3)

# முதல் தொகுதி வினாத்தாள் நேற்று எடுத்துவரப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 29

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான முதல் தொகுதி வினாத்தாள்கள் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

நேற்று முன்தினம் விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட இந்த வினாத்தாள்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளின் உதவியுடன் காங்கேசன்துறையில் இருந்து இழுவைப் படகு மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டு, அங்கிருந்து வாகனத்தில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

இரண்டாவது தொகுதி வினாத்தாள்களும் விமான மூலம் எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (உ-3-162)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையின் போது பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றுவோருக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கான கூட்டம் நாளை காலை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. [உ-3]

# புலமைப் பரிசில் பரீட்சை 23 ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருப்பதாக பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 26 ஆம் திகதி திட்டமிட்டபடி நடத்தப்படும் என்றும் —

கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான விசேட போட்டிப் பரீட்சையையும்—

யாழ். தொழில்நுட்பக்கல்லூரி நில அளவையாளர் பயிற்சி நெறிக்கான விசேட பரீட்சையும் — ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையின் முடிவில் நடத்த ஏற்பாடாகியுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார். [உ-3]

# எழுதுநர் சேவை விண்ணப்பங்கள்: யாழ். அரச அதிபருக்கு அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்களை சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை யாழ். அரச அதிபருக்கு அனுப்பலாம்.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கான விவரங்கள் அடங்கிய வர்த்தமானி யாழ் மாவட்டத்துக்கு உரியகாலத்தில் வந்து சேராததால் அவற்றுக்கு விண்ணப்பிக்க வேண்டியவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ் அரச அதிபர் பரீட்சை ஆணையாளருக்கு நேரில் எடுத்து விளக்கினார் என்று அறியவருகிறது

அதனையடுத்து விண்ணப்ப முடிவு திகதியை ஆகஸ்ட் 7 ஆம் திகதியில் இருந்து மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கவும்—

யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை யாழ். அரச அதிபர் சேகரித்து ஒன்றாக பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவும் இணக்கம் காணப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதன்படி இதுவரை தமது விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பியவர்கள் தவிர, எஞ்சியோர் தமது விண்ணப்பங்களை செயலகத்தில் சமர்ப்பிக்கலாம் என்று அரச அதிபர் தெரிவித்தார். (உ-3-162)

## எழுதுநர் போட்டிப் பரீட்சை:

# தெரிவானோருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அமைய எழுதுநர் போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 304 பேரில் தற்போது தற்காலிக நியமனம் பெற்றிருக்கும் முதல் தொகுதியினருக்கு நிரந்தர நியமனம் வழங்க யாழ் அரச அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் நியமனம் வழங்கப்பட்டவர்களினதும் —

தபால் திணைக்களம், வங்கிகள் உட்பட மற்றும் திணைக்களங்களுக்கு அடுத்த சில தினங்களில் நியமிக்கப்படுபவர்களினதும் பதவிகள் நிரந்தரமாக்கப்பட இருக்கின்றன

நியமனம் பெறாமல் பட்டியலில் எஞ்சியோர் விரைவில் நடைபெறவிருக்கும் எழுதுனர் சேவை போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (உ-3)

## மேஜர் முரளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

மேஜர் முரளி நினைவு நாள் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.45 மணி முதல் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கல்விக் கோட்டப் பிரிவு இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளது. (உ)

# இன்று

உடுவில், ஜூலை 29

சுன்னாகம் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான விவசாய அறிவுப் போட்டிகள் இன்று புதன் கிழமை சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் அதிபர் திரு. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெறும். [இ-152]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 29

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் கலந்துரையாடல் ஒன்று, யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று பி. ப. இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது காங்கேசன் சிமெந்து ஊழியர்களின் நலன் குறித்துச் செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆராயப்படும் என்று நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன

★ ★ ★

யாழ். திருமறைக் கலாமன்றம் மாதம் ஒரு தடவை நடத்தும் இலக்கிய அவைத் தொடரில் இன்று "இலக்கிய இன்பம்" என்னும் பொருளில் அவை கூடும்.

இன்று மாலை 5மணிக்கு மன்றக் கேட்போர் கூடத்தில் திரு. வி. என். செல்வரெத்தினம் [கல்வித் திணைக்கள முகாமைத்துவ வள ஆளணி உத்தியோகத்தர்] இலக்கிய அவை நிகழ்வினை நடத்துவார். (உ-51)

## விண்ணப்பிக்கும் மாணவர் கவனத்துக்கு . .

யாழ்ப்பாணம், ஜூலை 29

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் தேசியடிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள், தமது விண்ணப்பப்பத்திரத்தில் இரண்டு விலாசங்களை எழுதுவது பயனுள்ளது என அறிவுறுத்தப்படுகிறது.

படிவத்தில் விலாசம் எழுதுமாறு கேட்கப்பட்ட 7 ஆம் இலக்கக் கூட்டில் நிரந்தர (யாழ்ப்பாண) விலாசத்தையும் எழுதி தற்காலிக விலாசம் எனக் குறிப்பிட்டுக் கொழும்பில் உள்ள உறவினர்களின் விலாசத்தை எழுதுவது நன்மைபயக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பப்படும் என்பதாலும்—

தபால் சேவை தாமதமாக நடைபெறுவதாலும்—

கொழும்பு விலாசத்தைக் குறிப்பிட்டுவிட்டு உறவினர்களுக்கு அது குறித்துத் தெரிவிக்க வேண்டும்.

கொழும்பில் உறவினர்கள் இல்லாதவர்கள் தமது தற்காலிக விலாசமாகப் பின்வரும் முகவரியைக் குறிப்பிடலாம்.

Mr. J. D. David Lindon,
New Male Hostel,
University of Moratuwa,
Moratuwa.

## ஓய்வூதிய வவுச்சர்கள் குமணவில் வரும்

எதிர்வரும் 2 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'குமண' கப்பலில் ஆகஸ்ட் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் எடுத்து வரப்படும்.

அதே சமயம் - இரண்டாயிரத்து 200 தேசிய அடையாள அட்டைகளையும் கப்பலில் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-3)

## தடுப்புக் காவலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர்களை குறித்த விசாரணைகளைத் துரிதப்படுத்தி, குற்றம் இழைத்தவர்கள்மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்குமாறும் —

குற்றம் இழைக்காதவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் — ஜனாதிபதியின் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் மூலம் ஜனாதிபதியை யாழ். அரச அதிபர் [illegible] பிடத்தக்கது. [உ-3]

## நல்லூர் உற்சவ காலத்தில்

# மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து காவல்துறையினர் பணி புரிவர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் மக்கள் பிரதிநிதிகளையும் இணைத்துச் சேவையில் ஈடுபட தமிழீழ காவல் துறையினர் முடிவு செய்துள்ளனர்.

மக்கள் நலன் காக்கும் தொண்டில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களை இது சம்பந்தமாகத் காவல்துறைத் தலைமைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் கேட்டுள்ளார்.

உற்சவ காலத்தின் போது பொதுமக்களின் அசெளகரியங்களையும், பிரச்சினைகளையும் தீர்த்து உதவும் பொருட்டு, தமிழீழ காவல் துறையினருடன் இணைந்து செயலாற்ற விரும்பும் அரச, தனியார் துறை இளைப்பாறிய உத்தியோகஸ்தவர்கள், மற்றும் சமூக சேவையில் ஈடுபாடுள்ள பெரியோர்களை தமிழீழ காவல் துறையின் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் — என்று திரு. நடேசன் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளார். [அ]

# கிழக்கில் 6,400 பேர் காணாமற்போய்விட்டனர்!

## புள்ளி விவரம் தெரிவிக்கிறது

கொழும்பு, ஜூலை 29

கிழக்கு மாகாணத்தில் 6 ஆயிரத்து 400 பேர் வரையில் காணமற் போய் உள்ளனர்.

காணமற்போனவர்களைக் கண்டுபிடிக்கும் அமைப்பு ஒன்றின் பொதுச் செயலாளர் சந்திரா பீரிஸ் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தென் மாகாணத்தில் இது வரை 22 ஆயிரம் பேர் வரை காணமற் போய்விட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 700 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 300 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 400 பேரும் காணாமற்போய்விட்டனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

வடபகுதியில் காணாமற் போனோரின் எண்ணிக்கை தெரியவில்லை. அது தொடர்பான புள்ளி விவரம் சேகரிக்கப்படுகிறது.

காணாமற்போனவர்களை கண்டுபிடிக்க அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால், இது குறித்து இயக்கம் ஒன்று நடத்தப்படும்— என்று திரு. சந்திரா பீரிஸ் தெரிவித்தார். [ஒ-எ]

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி செல்வநாதன் (நாதன்)

காரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனுமாகிய செல்வநாதன் 25-7-92 அன்று இத்தாலியில் அகால மரணமானார்.

அன்னார் யசோதாதேவியின் [இத்தாலி] அன்புக் கணவரும், யகுநாத்தின் [இத்தாலி] அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - செல்லமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும், யோகலிங்கம் [பிரான்ஸ்], அச்சலிங்கம் [பிரான்ஸ்], காலஞ்சென்ற சண்முகலிங்கம், சாந்தி, சசிகலா, சுகந்தி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்னலட்சுமி [பிரான்ஸ்], செல்வேந்திரன், செளந்தரராஜன், அருணாரூரன் [பிரான்ஸ்], வசந்தாதேவி [பிரான்ஸ்], சிவகுமார் [பிரான்ஸ்], நஞ்சினி [பிரான்ஸ்], சிறீகரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ஆ. செளந்தரராஜன்
[செளந்தி மாஸ்ரர் - மைத்துனர்]

29/1, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. [21953]

## கிறிஸ்தோ அன்ரன்

யாழ். றெக்ளமேசனைச் சேர்ந்த பிரபல சம்மாட்டி கிறிஸ்தோ அன்ரன் நேற்று [28-07-92] மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் கிறிஸ்தோ அவர்களின் அன்பு மகனும், நீற்றம்மா [சித்தி]யின் அன்புக் கணவரும், சுமன், சுகந்தன், நிருபன், விஜயன், இராஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் [29-07-92] இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, இலங்கை பெந்தே கோஸ்தே சபை சேமக்காலை வசந்தபுரத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

17, பார்க் றோட்,
றெக்ளமேசன்,
யாழ்ப்பாணம். [21954]

தகவல்:
திருமதி நீற்றம்மா அன்ரன்
(மனைவி)

## குமாரசாமி வேலுப்பிள்ளை

சாவகச்சேரி - நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி வேலுப்பிள்ளை (D. L. O.) 28-7-92இல் காலமாகி விட்டார்.

இவர் குமாரசாமி - செல்லம்மாவின் மூத்த புதல்வனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி, இராசநாயகம், சீதாலட்சுமி, இரத்தினபாலசிங்கம் கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரவீந்திரா (லண்டன்), சுரேந்திரா, தர்மகுமாரி, மனோகுமாரி, கோகிலகுமாரி, தேவேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று [29-7-92] பிற்பகல் 3-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
வே. சுரேந்திரா (மகன்)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [21957]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org